# கழுகின் சத்தம்

## நவம்பர் 29, 2023

## 2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# இன்றுள்ளது போல் செய்தி முற்றிலும் அவசரமாயிருந்தால், தேவன் ஒரு வழியை உண்டுபண்ணுகிறார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை

38. இப்பொழுது, நினிவே பாவத்தால் நிறைந்திருந்தது என்று காண்கிறோம். அது புறஜாதி உலகமானதால், தீர்க்கதரிசி தயங்கினான். பாருங்கள், அது புறஜாதி தேசம், புறஜாதி மக்கள், அவனுடையவர் கள் அல்ல, எபிரேயர்கள் அல்ல. அவர்கள் புறஜாதிகள். நினிவே ஒரு சிறந்த வணிக கப்பல் துறைமுகமாய் இருந்தது. மீன் பிடிக்கும் தொழில் சிறப்பாக நடை பெற்றது. ஜனங்கள் மீன் பிடித்தனர். அவர்கள் அது பாவம் பெருகின நாடாக இருந்திருக்க வேண்டும். நிறைய பணம்; பணம் எங்கு ஏராளமாயுள்ளதோ, அங்கு பாவமும், வன்முறை சம்பவங்களும்

பெருகியிருக்கும் என்பது இக்காலத்து பொதுவான அபிப்பிராயமாகும்.

தேவன் அதைக் குறித்து சலிப்படைந்தார். எனவே அவர் அந்த தேசத்துக்கு ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார். அவர் தீர்க்கதரிசியிடம், “நீ நினிவேக்குச் சென்று, அதற்கு விரோதமாய் கூக்குரலிட்டு, 'இன்னும் நாற்பது நாட்களில் இந்த பட்டினம் அழிவுக்குள்ளாகும்' என்று சொல்” என்றார்.

யோனா, “நான் தொல்லையில் மாட்டிக் கொள்வேன்” என்று நினைத்தான். அவன் அதிக நிச்சயமுள்ளவனாயிருக்க விரும்பினான். எனவே, ஒரு சிறு விடுமுறைக்கு செல்லலாமே என்று கருதி தர்ஷீசுக்குப் போனான். நாம் என்ன அறிந்து கொண்டோம் என்றால். நாற்பது நாட்கள் மாத்திரமே இருந்தன். பாருங்கள்?

எனவே, செய்தி மிகவும் அவசர மானது, காலம் சமீபமாயிற்று. நீங்கள் மற்றவைகளுடன் விளையாடிக் கொண் டிருந்து, பட்டம் பெற்று, ஏதோ ஒன்றைக் கண்டு பிடிக்க நினைக்காதீர்கள். நேரம் சமீபமாகிவிட்டது! இன்றைய ஜனங்களி டம் காணப்படும் விஷயம் என்னவெனில், அவர்கள் பெரிய பள்ளிக்கூடங்களைக் கட்டி, பெரிய காரியங்களைக் கொண் டிருக்க முனைகின்றனர். கிருபையானது... என்னே! நாம் கர்த்தருடைய வருகையைக் குறித்து பிரசங்கித்துக் கொண்டிருக்கையில், நமக்கு பள்ளிக்கூடங்கள் எதற்கு? நமக்கு தேவனிடம் மனந்திரும்புதல் அவசியமா யுள்ளது. பாருங்கள்?

39. ஹட்சன் டெய்லர் அந்த இளம் மிஷனரியிடம் கூறினது போல்... ஒரு சீனாக்கார இளைஞன் அவரிடம் வந்து, “திரு.டெய்லர், கர்த்தராகிய இயேசு

என்னை அவருடைய ஆவியினால் நிரப்பியிருக்கிறார்; நான் மிகவும் மகிழ்ச் சியாயிருக்கிறேன். நான் பத்து ஆண்டுகள் படித்து என் பட்டங்களைப் பெற்றுக் கொள் ளட்டுமா?" என்று கேட்டானாம்.

அதற்கு அவர், "மகனே, பட்டங்களுக் காக காத்திருக்காதே. மெழுகுவர்த்தி பற்றவைக்கப்பட்டிருந்தால், அதை போய் சொல்! அதை போய் சொல்! பட்டத்துக்காக காத்திருக்காதே. நீ பட்டப்படிப்பை முடிப் பதற்கு முன்பு, பாதி எரிந்து போயிருப் பாய்" என்றாராம்.

அது பற்ற வைக்கப்பட்டிருந்தால், உங்களுக்கு வேறொன்றும் தெரியவில்லை என்றால், அது எப்படி பற்ற வைக்கப் பட்டது என்பதை எடுத்துக் கூறுங்கள். வேறொருவரின் ஸ்தானத்தை அல்லது வேறொரு இடத்தை எடுத்துக் கொள்ள

முயற்சி செய்யாதீர்கள். அதை நீங்கள் அறிந்திருந்தால், நீங்கள் சத்தியம் என்று அறிந்துள்ளதை எடுத்துக் கூறுங்கள். "இவ்வகையில் தான் அது என் மேல் வந்தது, அப்பொழுது இப்படி தான் நான் உணர்ந்தேன்" என்று கூறுங்கள். அது... அதைக் காட்டிலும் உங்களுக்கு அதிகமாக தெரியாமல் போனால், தெரிந்ததைக் கூறுங்கள்! நாம் புறப்பட்டுச் செல்வோம்! செய்தி அவசரமானது, காலம் சமீபமா யிற்று.

40. ஏசாயா, "அந்த பிளவையை வைத்துக் கொண்டு, அவன் எப்படி சமாளிக்கிறான் என்று நான் முதலில் பார்க்கட்டும். அவன் எப்படி..." என்று கூறியிருந்தால்?

பாருங்கள், தேவன் அவனிடம், “இப்பொழுது அங்கு போய் அதை சொல்” என்றார். பாருங்கள்?

அவர் யோனாவிடமும் போகச் சொன்னார். ஓ, என்னே!

யோனா ஆழ்கடலில் சென்ற போது, அவனுடைய கப்பல் புயலில் சிக்கிக் கொண்டது. அவர்கள் பாய்மரத்தை உயர்த்தினார்கள், கப்பல் சுழலத் தொடங்கினது. இது என்ன விஷயம் என்று அவர்கள் வியந்தனர். கப்பலுக்குள் தண்ணீர் நிறைந்தது போல் தோன்றினது. ஒவ்வொரு மனிதனும் தன் தேவனை நோக்கிக் கூப்பிட்டான். முதலாவதாக என்ன தெரியுமா... யோனா விடுமுறை கழிக்க போய்க் கொண்டிருந்தான். எனவே அவன் உறங்கலாமே என்று நினைத்தான். அவன் கப்பலின் அடித்தளத்துக்கு சென்று, கால்

களை உயர்த்தி வைத்துக் கொண்டு உறங்கியிருப்பான். அப்பொழுது ஒருவன் அவனிடம் வந்து, “ஓ சோம்பேறியே, எழுந்திருந்து உன் தேவனை நோக்கிக் கூப்பிடு” என்றான். எது தவறாய் போனது என்று யோனா அறிந்து கொண்டான்.

அவ்வாறே, இன்றைக்கு எது தவறா யுள்ளது என்பதை ஒவ்வொரு மனிதனும் அறிந்திருக்கிறான். பாருங்கள்?

41. அவன், “இது என் தவறால் உண்டானது தான். என் கைகளைக் கட்டி, என்னை தூக்கி சமுத்திரத்தில் போட்டு விடுங்கள். அப்பொழுது இந்த கஷ்டம் நீங்கிவிடும்” என்றான். அவர்கள் நற்பண்பு கொண்டவர்களாயிருந்தபடியால், அவ் விதம் செய்ய அவர்களுக்கு மனதில்லை. ஆனால் அவன் தீர்க்கதரிசியென்றும், அவன் என்ன கூறுகிறான் என்பதை

அறிந்திருக்கிறான் என்றும் அவர்கள் கண்டுகொண்டனர். அவன், “நான் முதலில் விடுமுறையைக் கழிக்கலாமே என்று எண்ணினேன். ஆனால் தேவனோ நான் விடுமுறை கழிப்பதை விரும்பவில்லை. அங்கு நான் சென்றாக வேண்டும். நான் செய்ய வேண்டிய ஒரு பணி உண்டு. நான் போவதற்கு முன்பு சிறிது ஓய்வெடுக்க லாமே என்று நினைத்தேன். இப்பொழுது நான் போயாக வேண்டும். செய்தி அவசரமானது. அங்கு நான் அடைந்தாக வேண்டும்” என்றான்.

நான் நினைக்கிறேன், ஆயத்தப்படுத் தப்பட்ட அந்த குறிப்பிட்ட மீன், யோனா வை விழுங்கி அவனை வயிற்றில் கொண் டவுடனே, அது எதிர் திசையில் திரும்பி, தண்ணீரை நாலா பக்கங்களிலும் வாரி யடித்து, வேகமாக நினிவேயை நோக்கி நீந்திச் சென்றிருக்க வேண்டும். ஆயத்தப்

படுத்தப்பட்ட அந்த மீனுக்குள் தேவன் அந்த செய்தியை கொண்டு சென்றார். அது வேகமாக நினிவேயை நோக்கிச் சென்றது. ஏனெனில் அதற்குள் செய்தியாளன் பயணம் செய்து கொண்டிருந்தான். அவன் தவறான கப்பலில் ஏறினான், ஆனால் தேவனோ அவனுக்காக ஒரு கப்பலை ஆயத்தம் செய்து கொடுத்தார்.

எனவே, நாம் மாத்திரம் தேவனுக்கு செவி கொடுத்தால் தேவன் பெரிய காரியங்களைச் செய்ய வல்லவராயிருக் கிறார். பாருங்கள்? வழி இல்லாத இடத்தில் அவர் வழியை உண்டு பண்ணுவார். அவரே வழி. பாருங்கள்? இன்றுள்ளது போல் செய்தி முற்றிலும் அவசரமா யிருந்தால், தேவன் ஒரு வழியை உண்டு பண்ணுகிறார்.



# நீங்கள் என்ன செய்த போதிலும், சபைக்குச் செல்லுங்கள்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #21

Q.331. **சகோ.பிரன்ஹாமே, மணவாட்டி எந்த சபைக்கும் செல்லக்கூடாது, நீர் அங்கு பிரசங்கம் பண்ணினாலொழிய, அல்லது இந்த கூடாரத்திற்கு மட்டும் வரலாம் என்று நீர் போதிக்கிறீரா?**

Q.332. **மேலும், வேலை செய்தல், மீன் பிடித்தல் போன்ற விஷயத்தில் நாம் ஞாயிற் றுக்கிழமையையும் விடுமுறைகளையும் ஆசரிக்க வேண்டிய அவசியமில்லை என்று நீர் போதிக்கிறீரா?** (அது ஞாயிற்றுக்கிழமை என்பது போல் தான் காணப்படுகிறது. கீழ் பாகத்தில் அது ஞாயிற்றுக்கிழமை. அது விடுமுறைகள் அல்லது ஞாயிற்றுக்கிழமை கள் என்று நினைக்கிறேன். ஆம், ஞாயிற் றுக்கிழமைகள், அப்படித்தானே அது

காணப்படுகிறது? [சகோ. பிரன்ஹாம் யாரோ ஒருவரிடம் பேசுகிறார் - ஆசி]. பரிசுத்த நாட்கள், ஞாயிற்றுக்கிழமையும், பரிசுத்த நாட்களும்).

122. இல்லை, நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். பாருங்கள்? அதை மறுபடியும் படித்து அதற்கு ஒவ்வொன்றாக பதிலளிக்க விரும்புகிறேன்.

"மணவாட்டி எந்த சபைக்கும் செல்லக் கூடாது. நீர் அங்கு பிரசங்கம் பண்ணினா லொழிய, அல்லது இந்த கூடாரத்திற்கு மட்டும் வரலாம் என்று நீர் போதிக்கிறீரா?" இல்லை! நான் அவ்விதம் போதிப்ப தில்லை. அதை நான் நம்புவது கிடையாது. இங்கு ஊழியக்காரர் அமர்ந்துள்ளனர், அவர்கள் நாடெங்கும் பரவியுள்ளனர், அவர்கள் அந்த மணவாட்டியின் பாகம் என்று நான் நம்புகிறேன். வார்த்தையை

போதிக்கின்ற அவர்களுக்கு விருப்பமான எந்த சபைக்கும் ஒரு மனிதனோ அல்லது ஒரு ஸ்திரீயோ செல்லலாம் என்பது என் கருத்து. அவர்கள் முழு வார்த்தையைப் போதிக்கின்ற, வேறெந்த சபைக்கும் உங்களால் போக முடியாமல் போனால், நீங்கள் முழு வார்த்தையைப் போதிக்கின்ற இடத்துக்கு செல்லும் வரைக்கும், பாதி வார்த்தையை அவர்கள் போதிக்கும் அந்த இடத்துக்குச் செல்லுங்கள். நீங்கள் என்ன செய்த போதிலும், சபைக்குச் செல்லுங்கள். அதைச் செய்யுங்கள்.

123. "மேலும் வேலை செய்தல், மீன் பிடித்தல் போன்ற விஷயத்தில் நாம் ஞாயிற்றுக்கிழமையை அனுசரிக்க வேண்டிய அவசியமில்லை என்று நீர் போதிக்கிறீரா?"

124. நீங்கள் ஞாயிற்றுக்கிழமையில் சபைக்குப் போவதற்கு பதிலாக, மீன் பிடித்தல், வேட்டையாடுதல், வேலை செய்தல் போன்றவைகளை செய்தால், அது பாவம் என்பது என் கருத்து. நீங்கள் தேவனுடைய கட்டளைகளை மீறுகிறவர் களாய் இருப்பீர்கள். அப்படி ஒரு கட்டளை உள்ளதா? ஆம், ஐயா! பழைய ஏற்பாட்டில் ஒய்வு நாள் ஒரு முன்னடையாளமாக கொடுக்கப்பட்டுள்ளது. அது அனைத்தும்... நீங்கள் ஓய்வு நாளை ஆசரிக்க வேண்டும் என்பதற்காக இயேசு வரவில்லை. பழைய ஏற்பாட்டின் ஓய்வு நாள் சனிக்கிழமை, அது வாரத்தின் முடிவு. ஞாயிற்றுக்கிழமை எட்டாம் நாள். அல்லது வாரத்தின் முதலாம் நாள், அந்த நாளில் தான் இயேசு உயிரோடெழுந்தார்.

125. நான் நினைக்கவில்லை அது சரியென்று... நீங்கள் தொலைவில் காட்டில்

எங்காவது வேட்டை பயணத்தை மேற் கொண்டு சென்றிருந்தால், அதை சுற்றிலும் சபை எதுவுமில்லை என்றால், உங்களால் ஒன்றும் செய்ய முடியாத நிலை என்றால்; அப்பொழுது நீங்கள் மீன் பிடித்தால், அதனால் பரவாயில்லை என்று எண்ணு கிறேன். ஆனால் நீங்கள் நகரில், அல்லது சபை நடந்து கொண்டிருக்கும் இடத்துக்கு அருகாமையில் இருந்தால், நீங்கள் எப்படி யாவது எங்காவது சபைக்கு சென்றே ஆக வேண்டும்...

126. வேலை செய்யும் விஷயத்தில், காளை குழியில் விழுந்து விட்டால், அல்லது ஏதாவதொன்றை ஞாயிற்றுக் கிழமையன்று செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், நீங்கள் அதைச் செய்யுங்கள், உங்களால் தவிர்க்க முடியாமல் அதை செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டால். ஆனால் ஒரு வேலையைச்

செய்ய நீங்கள் ஞாயிறு வரை காத்தி ருப்பீர்களானால், அதை அவ்விதம் செய் வீர்களானால், நீங்கள் தவறு செய்கிறவர்க ளாயிருப்பீர்கள். பாருங்கள்? நாம் அவ்விதம் செய்யக் கூடாது, நாம் பரிசுத்த நாளுக்கு மரியாதை செலுத்த வேண்டும்

127. இப்பொழுது, ஞாபகம் கொள் ளுங்கள், எங்காவது, எந்த இடத்திலாவது சபைக்குச் செல்லுங்கள்... நான் குறிப்பிட்ட ஒரு ஸ்தாபன சபையின் பெயரைக் கூற முடியும், ஆனால் அவ்விதம் நான் செய்ய மாட்டேன், ஏனெனில் இந்த சபை, அவர்கள் போதிப்பதாக நான் அறிந்துள்ள ஒரே ஒரு காரியம் என்னவெனில், அவர்கள் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பதாக அறிக்கையிடுகின்றனர். நல்லது, நானும் அதை செய்கிறேன். அவர்களுடைய மற்ற போதகம் அனைத்தும்... தண்ணீர் பாவத்

தைப் போக்குகிறது என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர். இப்பொழுது, அவர் கள் ஒருத்துவக்காரர் அல்ல. தண்ணீர் மறு ஜென்மம் அளிப்பதாக அவர்கள் விசுவா சிக்கின்றனர். நான் அவ்விதம் விசுவாசிப் பதில்லை. ஓ, அவர்கள், எங்காகிலும் தெய்வீக சுகமளித்தல் காணப்பட்டால், அது பிசாசினால் உண்டானது என்று விசுவாசிக்கின்றனர். அவர்கள் விசுவாசிப் பது அனைத்தும்... அவர்களிடம் உள்ள ஒரே காரியம் என்னவெனில், நீங்கள் செய்ய வேண்டிய ஒரே காரியம் அந்த புத்தகத்தில் உங்கள் பெயரைப் பதிவு செய்வதே. உங்கள் பெயர் அங்கு பதிவு செய்யப்படா விட்டால், நீங்கள் இழக்கப் படுவீர்கள் என்பது அவர்கள் கருத்து. இப்பொழுது, நான் அவ்விதம் விசுவாசிப் பதில்லை. ஆனால் உங்களுக்குப் போக வேறெந்த சபையும் இல்லாமல் போனால்,

(அவர்களைக் குறை கூற நான் அங்கு செல்லமாட்டேன்), ஆனால் நான் யார் பக்கத்திலாவது உட்கார்ந்திருக்கும்போது என் இருதயத்திலுள்ள கிறிஸ்து அங்குள்ள யாரிடத்திலாவது பாதிப்பை உண்டு பண்ணுவார் என்னும் அந்த நோக்கத்துடன் செல்வேன். அவர்கள் மத்தியில் செல்லுங் கள், ஆனால் அவர்கள் அவிசுவாசத்தில் பங்கு கொள்ளாதீர்கள்.





# யோபு

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: அதன்பின் இயேசு வந்து அழைத்தார், 64-02-13

36. யோபு என பெயரிடப்பட்ட ஒரு மனிதன் ஒரு காலத்தில் வாழ்ந்தான். வேதத்தில் உள்ள பழைய தீர்க்கதரிசிகளில் அவனும் ஒருவன். அவன் ஒரு மகத்தான மனிதன். அவன் கர்த்தரை நேசித்து, தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் சரியாகச் செய்தான். ஆதலால் சாத்தான் அவனை அரித்தெடுக்க ஆசை கொண் டான். ஒரு நாள் அவன் தேவனிடம்... இல்லை தேவன் அவனைப் பார்த்து சாத்தானே, ''நீ எங்கிருந்து வருகிறாய்? என்றார்“.

''பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித் திரிந்து வருகிறேன்'' என்று கூறினான்.

''என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்கு பயந்து பொல் லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவ னைப் போல பூமியில் ஒருவனும் இல்லை'' என்று கூறினார்.

“ஓ, அவனுக்கு எல்லாவற்றையும் அளிக்கிறீர், எல்லாவற்றையும் செய்கிறீர். நிச்சயமாக அவன் சிறந்த மனிதன் தான். ஆனால் ஒரு விசை மாத்திரம் என் கைக்குள் வரட்டும். அவன் போக்கையே மாற்றிவிடுகிறேன், உம் முகத்துக்கு எதிரே உம்மை தூஷிக்கச் செய்கிறேன்” என்று கூறினான்.

அதற்கு அவர் ''உன்னால் முடியாது'' என்றார். அதுதான் அவர் ஒரு விசுவாசி யின் மீது கொண்டுள்ள நம்பிக்கையாகும். ஏன்? அவர் முடிவில்லாதவர், நித்திய

மானவர். துவக்கமுதல் முடிவுவரை அவர் அறிந்திருக்கிறார். சாத்தானால் அதைச் செய்ய முடியாதென்பதை அவர் அறிந் திருந்தார். ஏனெனில் அவர்தான் வார்த்தை. யோபு என்ன செய்யப் போகிறான் என்பது அவருக்குத் தெரியும்.

37. இப்பொழுது யோபை நினைவில் கொள்ளுங்கள். அவன் (சாத்தான் - தமிழாக்கியோன்) அவனை பருக்களால் வாதித்தான், அவன் பிள்ளைகளைக் கொன் றான். அவனுக்கிருந்த எல்லாவற்றையும் எடுத்துப் போட்டான். அவனுடைய ஆஸ்தி போயிற்று, அவனைத் தேற்ற வந்தவர்களும் ஒன்றும் செய்யமுடியாமல் அவனை ஒரு இரகசிய பாவி என்று குற்றஞ் சுமத்தினர். இந்த வயதான யோபு ஒரு இடுக்கமான சூழ்நிலையை அடைந் தான். நீ முதலாவது இடுக்கத்திற்குள்ளாகச் செல்லுதல் வேண்டும். பாதையின்

முடிவை அடைந்துவிட்டோம் என்கின்ற நேரத்திற்கு நீ வந்தாக வேண்டும்.

யோபு தன் பாதையின் முடிவை அடைந்து, ''நான் பிறந்த நாள் சபிக்கப் படுவதாக, சூரியன் பிரகாசிக்காமல் இருப்பதாக. இரவில் சந்திரன் பிரகாசி யாமல் இருப்பதாக,'' என்று கூறினான். அந்த இடுக்கமான சூழ்நிலையில், அச்சம யத்தில் இயேசு வந்தார்.

அவன் கீழ் நோக்கி ''ஒரு மனிதனைக் காண்கிறேன், ஒரு பூ மரித்து வசந்த காலத்தில் உயிரடைகிறது. ஒரு மரம் உதிர்ந்து போனாலும் தண்ணீரின் வாசனை யால் அது மறுபடியும் துளிர்விடும் என்றான். ''தாவர இனத்தைச் சேர்ந்த எல்லாம் மறுபடியுமாக உயிர் வாழ்வதை அவன் கண்டு, “ஒரு மனுஷன் படுத்துக் கிடக்கிறான், மனுபுத்திரன் ஜீவித்துப்

போனபின் அவன் எங்கே?'' என்று கூறுகிறான்.

அவன் வயதான ஒருவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். ''அவன் பிள்ளைகள் வந்து அவனுக்காக துக்கித்தாலும் அதை அவன் காணமுடியாது. ஓ நீர் என்னை பாதாளத்தில் ஒளித்து உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து, எனக்கு ஒரு காலத்தை குறித்தருளும். நாம் சென்று...'' என்று கூறுகிறான்.

பிறகு அவன் இப்படி பேசிக் கொண்டே போகிறான். அவன் முடிவில் துயரத்தில் இருந்தான். “என்ன நடக்கும்? மரத்தில் இலைகள், பூக்கள் மறுபடியுமாக துளிர்த்து ஜீவிக்கின்றன, மற்றவைகளும் வருகின்றன. ஆனால் மனுஷனோ கீழே படுத்து ஜீவித்துப் போகிறான்!'' அவன் துயரத்தில் இருந்தான். அந்த வயதில்

அவனுக்கு என்ன ஆகப் போகின்றது என்று அவன் அறியாதிருந்தான்.

38. அவன் அவ்வாறிருந்தபோது, அதன்பின் இயேசு வந்தார். தேவன் அவன் தலையை வானத்திற்கு ஏறெடுத்துப் பார்க்கும்படி செய்தார். கடைசி நாட்களில் இயேசு வருவதை அவன் கண்டான்.

அந்த இருண்ட வேளையில் “தேவனை தூஷித்து ஜீவனை விடும்'' என்று அவன் மனைவி கூறின போதிலும் அவன் நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசு கிறாய். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், ”கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்“ என்றான். அவனுடைய மனைவியும், அவனுடைய சபையும், இன்னும் ஏனையோரும் அவனைப் புறக்கணித்தனர். தான் எங்கு செல்கிறோம் என்று அவன் அறியாதிருந்த அந்த

இருண்ட நேரத்தில் அவ்வழியில் இயேசு வந்தார். அதன் பிறகு அவன் என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். தோல் புழுக்கள் (Skin worms) இச்சரீரத்தை அழித்தாலும், "நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்" என்றான். அவனுடைய இருண்ட மணி நேரத்திலே, அதன்பின் இயேசு வந்தார். ஆம் ஐயா.



# எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்துங்கள். அக்கினி விழப்போகிறது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: *கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு, நவம்பர் 25, 1965*

233. சபையே, (நான் பேசிக்கொண் டிருக்கும் நாடு முழுவதிலும் உள்ளவர் களே), நீங்கள் ஸ்தாபனத்திலிருந்தும் உலகத்தின் அசுசியிலிருந்தும் உலகத்தின் காரியங்களிலிருந்தும் உங்களைப் பிரித்துக் கொள்வீர்களானால்... மனிதனால் உண் டாக்கப்பட்ட கோட்பாடுகளிலிருந்தும், நியமங்களிலிருந்தும் உங்களைப் பிரித்துக் கொண்டு மேலே நோக்கிப்பாருங்கள். ஆயத்தமாகுங்கள். இந்நாட்களில் ஒன்றில் அக்கினி விழப் போகிறது. தேவன் அவரை அனுப்பப் போகிறார். அது காண்பதற்கு சிறந்த காட்சியாயிருக்கும். அவர் வரும் போது நீ ஆயத்தமாயிருப்பாயா? அவர்

வரும்போது, அவருடன்கூட மேலே செல்ல நீ ஆயத்தமாயிருப்பாயா? இயற்கைக்கு மேம்பட்ட மணவாட்டி இரகசியமாக எடுத்துக்கொள்ளப்படுதல் - அவள் அழிவுள்ள தன்மையிலிருந்து அழியாமைக்கு மாற்றப்படுவாள். அவள் ஒரு நொடிப்பொழுதில், ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாவாள். கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை.

234. அன்று இராணுவ தினத்தன்று, நான் டூசானில் இருந்தேன். என் மகன் இராணுவ அணிவகுப்பைக் காண விரும்பினான். நான் படித்துக்கொண்டிருந்தேன். அவனைக் கொண்டுபோக எனக்கு நேரமில்லை. எனக்கு வியாதியஸ்தரிடமிருந்து நிறைய அழைப்புகள் வந்தவண்ணம் இருந்தன. அவன், "அப்பா, அவர்கள்

என்னைக் கொண்டு போகமாட்டேன் என்கி றார்கள். நீங்கள் என்னைக் கொண்டு போங்கள்'' என்றான்.

நான் சரியென்றேன்.

235. சகோ. சிம்சனும் (அவர் இங்கிருக்கிறார் என்று நினைக் கிறேன்) அவருடைய மகனும் வர விரும்பினார்கள். அவர்களையும் காரில் ஏற்றிக்கொண்டு விரைந்து சென்றேன்.

236. ஒரு மூலையில் நான் நின்று கொண்டிருந்தேன். சற்று நேரம் கழிந்து சிறிது தூரத்திலிருந்து 'பாம்ப், பாம்ப், பாம்ப்' என்னும் மேள சத்தம் என்னை நோக்கி வருவதைக் கேட்டேன். அங்கு நான் நின்று கொண்டிருந்தேன். நான், ''இந்த சிறுவர்கள் உண்மையில்.... இராணு வத்தைக் குறித்து புத்தகங்களில் படிக்கின் றனர். அவர்களுக்கு இது மிகவும் பிடிக்

கும்'' என்று எண்ணினேன். முதலாவதாக, முதலாம் உலகப்போரில் உபயோகித்த பழைய 'டாங்கி'கள் (tanks) வருவதைக் கண்டேன். இதோ அவை வந்து கொண் டிருந்தன - சிறு டாங்கி கள். அடுத்ததாக வந்த இரண்டாம் உலகப்போரில் உபயோ கித்த புதிய பெரிய டாங்கிகள் - ஷெர்மன் டாங்கிகள். அதற்கு அடுத்ததாக, அடுத்த தாக இப்படி அணிவகுப்பு சென்று கொண்டே யிருந்தது. சிறிது கழிந்து வீரத் தங்கப்பதக்கம் பெற்ற தாய்மார்கள் அணிவகுத்து வந்தனர். அதற்கு பிறகு அரிசோனா முழுவதிலும் உயிரோடுள்ள முதலாம் உலகப்போரில் சண்டையிட்ட பன்னிரண்டு இராணுவ வீரர் அணிவகுத்து வந்தனர். அதன் பிறகு அறியப்படாத வீரர் என்னப்படும் அலங்கரிக்கப்பட்ட ஒரு வண்டி (Float) வந்தது - ஒரு சிறு வெள்ளை சிலுவை. அந்த வண்டியில் ஒரு கடற்படை

வீரனும் ஒரு இராணுவ வீரனும் நின்று கொண்டு காவல் காத்துக்கொண்டிருந்தனர். அந்த வண்டியில் ஒரு சிறு தடுப்பு சுவர். அதன் மறுபக்கத்தில் ஒரு முதிய, தலை நரைத்த தாய் தங்கப்பதக்கத்தை அணிந்து கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தாள் - அவள் அருகில் ஒரு அழகிய மனைவி அழுது கொண்டிருந்தாள். அவளுடைய கணவன் போரில் இறந்துபோனான், பக்க வாட்டில் தலையை திருப்பின வண்ணமாய் கந்தை உடுத்த ஒரு பையன் இருந்தான் - அவனுடைய தந்தை கொல்லப்பட்டார். அதன் பின்னால் இன்னும் அதிகம், அதிகம், அதிகம் வந்து கொண்டிருந்தன. அதன்பிறகு புதிய இராணுவம் வந்தது.

237. அங்கு நான் நின்றுகொண்டிருந் தேன். காண்பதற்கு என்ன ஒரு அழகிய காட்சி! ஆனால் எவ்வளவு வருத்தத்தை உண்டாக்கு வதாய் அமைந்திருந்தது! நான்,

"ஓ தேவனே, இந்நாட்களில் ஒன்றில், நான் வேறொரு காட்சியைக் காணப்போகி றேன்'' என்று எண்ணினேன்.

238. உயிர்த்தெழும் நாள் ஒன்றிருக் கும். அப்பொழுது முந்தினோர் பிந்தினோ ராயும் பிந்தினோர் முந்தினோராயும் இருப் பார்கள். பழைய தீர்க்கதரிசிகள் முதலில் எழுந்து வருவார்கள். அணிவகுப்பு ஆகா யத்தில் அணிவகுத்து செல்வதைக் காண் பார்கள். உயிரோடிருக்கிற நாம் நித்திரை யடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வ தில்லை. தேவ எக்காளம் தொனிக்கும், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர் கள் முதலாவது எழுந்திருப்பார்கள். நாமும் அவர்களுடன் அணிவகுத்து வரிசையில் செல்வோம். அல்லேலூயா! லூத்தர், வெஸ்லி, மெதோடிஸ்டு, பிரஸ்பிடேரியன், இப்படி வழிவழியாக கடைசி காலம்

வரைக்கும் - அவரவர் காலங்களில் வார்த்தையை ஏற்றுக்கொண்ட வர்கள்.

239. தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக. எல்லாவற்றையும் ஆயத்தப்படுத் துங்கள். அக்கினி விழப்போகிறது.



# தீர்க்கதரிசி ஆமோஸ்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை, 63-07-24

42. நாம் மறுபடியும் என்ன காண்கிறோம் என்றால், ஆமோஸ்... நான் இந்த ஆமோஸின் பேரில் பிரசங்கித்திருக்கிறேன். நீங்கள் எப்பொழுதாவது ஆமோஸின் வரலாற்றைப் படிக்க விரும்பினால், அது நல்ல ஒரு வரலாறு. நீங்கள் ஆமோஸின் வரலாற்றைப் படியுங்கள், ஆமோஸ் முதலாம் அதிகாரம். நியாயத் தீர்ப்பு வருவதற்கு முன்பு எச்சரிக்கை விடுக்கப்படுவதற்கு இதோ வேறொரு உதாரணம், அவன் எச்சரிக்கை விடுக்கவிருந்த அந்த பட்டினத்தில் யூதர் கூட்டத்

தினர் இருந்தனர். அவர்கள் எல்லோரும் ஒருவிதம் வழிவிலகியிருந்தனர். அது ஒரு பெரிய சுற்றுலா ஸ்தலமாக விளங்கியது. இன்று காலையில் அவனைக் குறித்த விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். அவனுடைய வழுக்கை மண்டை மலையின் உச்சியை அடைந்து, அவனுடைய சிறு வயோதிப கண்கள், அந்த மகத்தான தேசத்தின் பாவத்தை கண்டபோது குறுகியிருக்கும் என்று நினைக்கிறேன். அவனுடைய வெள்ளை தாடியை அவன் தன் விரல்களினால் இப்படி வருடியிருப்பான். என்னே ஒரு காரியம்! அவன் எங்கிருந்து வந்தானென்று யாருக்குமே தெரியாது.

அந்த தீர்க்கதரிசிகளை யாருமே அறியார்கள். அவர்கள் எங்கிருந்தோ

எழும்பி, அதேவிதமாக சென்றுவிடுகின்றனர்.

43. ஆமோஸ் நகரத்துக்குள் சென்று, “கர்த்தர் உரைக்கிறதாவது! மனந்திரும்புங்கள், இல்லையேல் அழிந்து போங்கள், தேவன் இந்த நகரத்தை அழித்துப் போடுவார். நீங்கள் உங்கள் சத்துருவுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டீர்கள். உங்கள் சத்துருவுடன் நீங்கள் சமாதானமாயிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அசீரியர்கள் தங்கள் சேனைகளை கூட்டிக் கொண்டிருக்கின்றனர். நீங்கள் இருவரும் ஒருமித்திருந்தாலொழிய நடந்து செல்ல முடியாது. அவ்வளவுதான்” என்றான்.

நாம் பிரிந்து வர வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நாம் உலகத்திலிருந்து பிரிந்து வர வேண்டுமென்று அவர்

விரும்புகிறார். ஒரே நேரத்தில் நாம் உலகத்துடனும் தேவனுடனும் வாழத் தலைப்படக் கூடாது; இப்பிரஞ்சத்துக்கு ஒத்த வேஷத்தை தரித்துக் கொண்டு தேவனுடன் வாழ முடியாது. நீங்கள் இவ்விரண்டில் ஏதாவது ஒன்றுடன் வாழ வேண்டும், நீங்கள் இவ்விரண்டில் ஏதாவ தொன்றை விசுவாசிக்க வேண்டும்.

44. இந்த ஜனங்கள் மனந்திரும்பா விட்டால், நியாயத்தீர்ப்பு ஜனங்களின் மேல் வருவது நிச்சயமென்று ஆமோஸ் முன்னுரைத்தான் என்று நாம் காண்கி றோம். (என்னே, அது எவ்வளவு நன்றாக நமது நாளுடன் பொருந்துகிறது). இந்த மகத்தான நகரத்தை நாம் மறுபடியும் பின்னிட்டு நோக்கிப் பார்க்கும்போது, அதன் பொருளாதாரம் சிறந்த நிலையில் இருந்தது, அவர்களுக்கு எல்லாமே

இருந்தது, அது செழித்திருந்தது. அவர்கள் செழிப்புற்றிருந்ததனால், அவர்கள் தேவ னுடைய சித்தத்தில் இருந்ததாக எண்ணி யிருந்தனர். செழிப்புக்கு தேவன் எப்பொ ழுதுமே காரணம் அல்ல என்று அவர்கள் கண்டு கொண்டனர். இல்லை, தேவன். சில நேரங்களில் சபைகளில் செழுப்புண்டாகும் போது, அது அவர்களை தேவனிடமிருந்து அகற்றிவிடுகிறது.

45. உங்களுக்குத் தெரியுமா, ஒரு சமயம் தேவன் இஸ்ரவேலரை நோக்கி, “நீ வயலில் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டு, உன்னை ஜலத்தினால் முழுக்காட்டி உள்ளே கொண்டு வந்தேன்”, அவருடைய சொந்த பிள்ளையாயிருக்க. “ஆனால் நீ வளர்ந்து பெரியவளாகி, மகா சௌந்தரிய வதியான போது, நீ வழிப்போக்கருடன் வேசித்தனம் பண்ணினாய்” என்றார்.

(எசே. 16:6,9,15). பாருங்கள்? “நீ ஏழை யும் தரித்திரமுமாயிருந்தபோது, என்னை சேவித்தாய். நான் உன்னை ஆசிர்வதித்து உனக்கு ஏராளமாக கொடுத்தபோது, நீ சோரம் போனாய்”, அது உண்மையென்று நிரூபிக்கப்பட்டுள்ளது. ஓ, என்னே!

நாம் என்ன காண்கிறோம் என்றால், இந்த தீர்க்கதரிசி ஆமோஸ் அந்த தேசத்துக்கு விரோதமாய் கூக்குரலிட்டான். அவன் ஒரு ஏர் உழவன் அவன் அவர்களுக்கு விரோதமாய் தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்கள் தேவனுடன் சரியாக ஆகாவிட்டால், அவர்கள் கூட்டாளியாக சேர்த்துக் கொண்டுள்ள அவர்களுடைய சத்துருவே அவர்களை அழித்துப் போடு வான் என்றான்.

46. பெருமையுள்ள நமது அமெரிக்கா வும் தேவ கோபாக்கினைக்குத் தப்பித்துக்

கொள்ளப் போவதில்லை. இங்கு நான் ஒரு நாள் பேசினது போல, இங்குதான் நான் அதைக் குறித்து பேசினேன் என்பது உறுதி எல்லாமே முடிவுக்கு வந்துவிட்டது. இனி முன்னேறக் கூடியது எதுவுமேயில்லை. அரசியலில் முன்னேற்றம் இருக்காது, அது போய்விட்டது. சமுதாய வாழ்க்கையில் நீங்கள் முன்னேற்றத்தைக் காண முடியாது, ஏனெனில் அது மிகவும் ஒழுக்கக்குலைச் சலாகிவிட்டது. அதை நீங்கள் முன்னேறச் செய்ய முடியாது. நீங்கள் எதிலும் நம்பிக்கை வைக்க முடியாது.

“சபையைக் குறித்து என்ன?”

நல்லது, சபையைக் குறித்து நீங்கள் ஒன்றுமே செய்ய முடியாது. அது சம்பிர தாய முறைமையாகிவிட்டது. அவர்கள் ஒரு பானை கூழுக்காக தங்கள் சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுவிட்டனர். அவர்க

ளுக்கு நியாயத்தீர்ப்பு காத்திருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இந்த தேசத்தைக் கடந்து சென்று, அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார். அவர்களோ அவருடைய கிருபையை தொடர்ந்து இகழுகின்றனர். அவர் தம்மை உறுதிப் படுத்தி, அவருடைய மகத்தான உறுதிப் படுத்தலின் மூலம், அவர் இந்நாளில் வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தை என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார். அவர்களோ அதைப் புறக்கணித்துக் கொண்டேயிருக்கின்றனர். பாருங்கள்? இப்பொழுது ஒன்றுமே விடப்பட்டிருக்கவில்லை. நீங்கள் எப்பொழுதுமே தேவனிடம் அப்படி செய்து கொண்டிருக்க முடியாது. பாருங்கள்?




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: சர்ப்பத்தின் வித்து, 58-09-28E

100. யாராகிலும் என்னிடம், இயேசு கிறிஸ்து சுமளிப்பவர் என்று கூறி, என் சபை என்னிடம், ''அற்புதங்களின் நாட்கள் கடந்து விட்டன'' என்று கூறி, எனக்கு சுகம் தேவைப்பட்டால், நான் பீடத்துக்கு என் னால் முடிந்தவரை வேகமாக ஓடிச்சென்று சுகத்தைப் பெற்றுக் கொள்வேன். நான் நிச்சயம் அப்படி செய்வேன்.

நான் பிரசங்கியாயிருந்து, என் பிரசங்க பீடத்தில் ஒரு பெண் பிரசங்கியை நான் ஏற்றி, ஒரு பெண் பிரசங்கம் செய்யக் கூடாதென்று நான் வேதத்தில் படித்தால், அவர்கள் என் முதுகு தோலை உறித்தாலும் நான் கவலைப்படாமல் அவளை நீக்கி விடுவேன்.

இப்பொழுது சகோதரி.ரைட் உட்கார்ந்து கொண்டிருக்கும் இடத்தில் ஒரு இரவு உட்கார்ந்திருந்த ஒரு பெண், அப்படி ஏதோ ஒன்றை நான் செய்ததற்காக என்னை வெளியே எறிந்துவிட முயன்றாள். ஆம், ஐயா. நான் அவளிடம், "இப்படிப்பட்ட உடை உடுத்தி என் சபைக்குள் வர நான் அனுமதிக்க மாட்டேன்" என்றேன். முன் பெல்லாம் அவர்கள் இதுவரை வெட்டின ஆபாசமான ஆடைகளை அணிவது வழக்கம். அவர்களுடைய பாதி உடல் வெளியே காணப்படும். நான், ''அவர்கள் என் சபைக்கு வருவார்களானால் நிச்சயம் வெளியே துரத்தி விடுவேன் என்றேன். இங்கிருந்த அவலட்சணமான ஆடை உடுத்த ஒரு பெண் (அதற்கு பிறகு அவள் இறந்து விட்டாள். இறக்கும் தருவாயில் அவள் என்னை வரவழைத்தாள். அவள் ஒரு கத்தோலிக்கப் பெண்.) இங்கு நடந்து

வந்து இப்படி உட்கார்ந்தாள். நான் திரும்பிப் பார்த்து அவள் அங்கு உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். அவர்கள் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தார்கள். நான் என் கோட்டை கழற்றி, அவளிடம் நடந்து சென்று, அவளுடைய தோள்களில் அதை போட்டு கொடுத்து, ''அம்மணி, நான் பிரசங்கிப்பதை நீ கேட்க விரும்பி னால், தேவனுடைய சபையில் நீ உள்ள போது, தயவுசெய்து இந்த 'கோட்'டை அணிந்து கொள்" என்றேன்.

101. அவள் வேகமாக எழுந்து முணுமுணுத்துக் கொண்டே கட்டிடத்தை விட்டு வெளியே சென்று, ''என் பசுவும் கூட அப்படிப்பட்ட மார்க்கத்தை பின்பற்ற நான் அனுமதிக்க மாட்டேன்'' என்றாள்.

நான், "கவலைப்படாதே, அது பின்பற் றாது'' என்றேன்.

நாங்கள் கூடாரக் கூட்டம் நடத்திக் கொண்டிருந்த போது, அவள் மரணத் தருவாயிலிருப்பதாக கூறி என்னை வரும் படி அழைத்தனர். அவளுக்கு மாரடைப்பு ஏற்பட்டு மரணத்தருவாயிலிருந்தாள். என்னை அழைத்துச் செல்ல அவள் கணவர் வந்திருந்தார். அவர் ''வேகமாக வாருங்கள்'' என்றார். (நான் அப்பொழுது கூட்டத்தில் இருந்தேன்). அவர் உயரமான வர். அவர் கதவருகில் நின்று எனக்காக காத்திருந்தார். நான் ஓடினேன்.

நான் என் காரில் ஏறி அங்கு சென்றேன். அங்கு சென்ற போது, ஹாவர்ட் பார்க்கில் வசிக்கும் அந்த வயோதிப நர்ஸை கண்டேன். அவள், ''சங்கை போதகரே, நீங்கள் வந்திருக்க வேண்டிய அவசியமில்லை'' (அது சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு, அதைக் காட்டிலும் அதிகமாக கூட இருக்கலாம்),

''அவள் இறந்து விட்டாள். அவள் இறந்து மூன்று நிமிடங்களாயின. அவள் உங்களுக் காக உரக்கச் சத்தமிட்டாள். உங்களுக்கு என்னிடம் ஒரு செய்தி உண்டு'' என்றாள்.

நான், “என்ன?” என்றேன்.

அவள், ''அந்த போதகரிடம், 'தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று கூறினதாக சொல்லவும்,'' என்றாள் என்று கூறினாள்.

102. அவளைக் காண நான் சென்றேன், அழகானவள். அவள் அதிகமாக வேதனைப்பட்டதால் மூக்கில் சுருக்கங்கள் விழுந்திருந்தன. அழகான பெண். அந்த சுருக்கங்கள் கவனத்தை கவரும் வகையில் இருந்தன. கண்கள் குழியிலிருந்து முழுவதும் வெளியே வந்திருந்தன. அவை பின்னால் செருகியிருந்தன, அவள் மலம் கழித்திருந்தாள். மூத்திரமும் போயிருந்

தாள். அவளுடைய படுக்கையிலிருந்து புகை வந்து கொண்டிருந்தது.

அவள் கணவர், ''சகோ. பிரான்ஹாமே, ஜெபம் செய்யுங்கள். அவள் உங்களைக் காண வேண்டுமென்று விரும்பினாள்'' என்றார்.

நான், ''அவளுக்கு இப்பொழுது எந்த ஜெபமும் உபயோகமிராது'' என்றேன்.

மரம் எந்தப்பக்கம் சாய்கிறதோ அந்தப் பக்கம் விழுந்து போகும். “மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதை அறுப்பான்.'' (கலா.6:7).



# மனந்திரும்பாமல் போனால், நியாயத்தீர்ப்பு வருவது உறுதி!

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை, 63-07-24

73. மனந்திரும்பாமல் போனால், நியாயத்தீர்ப்பு வருவது உறுதி! எசேக்கியா மனந்திரும்பினான். பாருங்கள்? நினிவே மனந்திரும்பினது.

ஆகாப் மனந்திரும்பவில்லை. நெபு காத்நேச்சார் மனந்திரும்பவில்லை. நோவா வின் காலத்தில் இருந்த ஜனங்கள் மனந் திரும்பவில்லை. ஆகையால் நியாயத் தீர்ப்பு அவர்களை வாரிக் கொண்டு போனது. பாருங்கள். ஆனால் அவர் முதலில் ஒவ்வொருவரையும் எச்சரிக்

கிறார். ஒவ்வொருவரும் எச்சரிக்கை பெறு கின்றனர்.

இப்பொழுது, காலம் சமீபமாயிருப் பதைக் காணும் போது எச்சரிக்கை உள்ளதாக உணரும் ஒவ்வொருவரும், தேவ கோபாக்கினை தாக்குவதற்கு முன்பு வேகமாக மனந்திரும்புவார்களாக.

இப்பொழுது, இதை நாம் பிரான்ஹாம் கூடாரத்துக்கு கொண்டு வருவோம். இவைகளை நாம் கண்டு, அது சத்தியம் என்று அறிந்திருக்கிறோம். இது முற்றிலும் உண்மை என்று நாம் அறிந்திருக்கிறோம். வார்த்தையின் கட்டளை என்னவெனில், நீங்கள் மனந்திரும்பி உங்கள் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுவீர்களா னால், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றும், வாக்குத்

தத்தமானது உங்களுக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்பதே. பாருங்கள்?

74. அண்மையில் ஒருவர், திரு. டௌ, என்னிடம், “சகோ. பிரான்ஹாமே, எனக்கு வயதாகிக் கொண்டே போகிறது. தொண்ணூற்றொன்று வயது, நான் பலவீனமடைந்து வருகிறேன். நான் மரிக்க ஆயத்தமாயிருக்கிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நான் போக ஆயத்தமாயிருக்கிறேன் என்று நினைக்கிறீர்களா? நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன் என்று நினைக்கிறீர்களா?” என்று கேட்டார்,

நான், “திரு.டௌ, உடல் பரிசோதனைக்காக நீங்கள் எப்பொழுதாவது மருத்துவரிடம் சென்றதுண்டா? என்று கேட்டேன்.

அவர், “ஆம்” என்றார்,

நான், "நீங்கள் அவரிடம் கூறுகிறீர்கள்... இப்பொழுது, மருத்துவர் என்ன செய்கிறார் என்றால், அவருக்கு அங்கு ஒரு புத்தகம் உள்ளது. அவர் அந்த புத்தகத்தை எடுத்து, 'இப்பொழுது, நான் முதலாவதாக இந்த மனிதனுக்கு செய்ய, வேண்டியது, அவருடைய இருதயத்தை பரிசோதிப்பதே' என்று கண்டுகொள்கிறார். எனவே அவர் பரிசோதனை குழாயை (stethoscope) எடுத்து தன் காதில் மாட்டிக்கொண்டு இருதயத்தைப் பரிசோதிக்கிறார். அடுத்த தாக அவர் செய்வது, அவருடைய இரத்த அழுத்தம் எவ்வளவு என்பதை அவரு டைய கரத்தில் அழுத்தம் உண்டாக்கி கண்டுபிடிக்கிறார். அடுத்ததாக அவர் செய்வது, அவருடைய சிறுநீரை சிறிது எடுத்து, அதன் பிறகு சிறிது இரத்தத்தை எடுத்து, இவ்விதமாக வெவ்வேறு காரியங் களைச் செய்கிறார். அவையனைத்தையும்

அவர் பரிசோதித்து விட்டு அவரால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால்... அவர் எக்ஸ்-ரே எடுக்கிறார். அப்பொழுதும் அவரால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், 'அவர் திரு. டெள், உங்கள் உடல் நன்றாக இருக்கிறது' என்கிறார்" என்றேன்.

அவர் எதை ஆதாரமாகக் கொண்டு இவைகளைச் செய்கிறார்? அவருடைய மருத்துவ புத்தகத்தில் உள்ள நிபந்தனை களையே. அதை எழுதின் தலைமை விஞ்ஞானி, உடலில் ஏதாகிலும் கோளாறு இருந்தால், அது இங்கே காண்பிக்கும், இதை இங்கு செய்யும், அதை அங்கு செய்யும் என்று எழுதி வைத்திருக்கிறார். எனவே அவருக்குத் தெரிந்த மட்டில், நீங்கள் உடலைப் பொறுத்தவரையில் நன்றாயிருக்கிறீர்கள்.

75. இப்பொழுது, நான் ஆத்தும பரிசோதனை செய்யப் போகிறேன். பாருங்கள்? ஆத்தும பரிசோதனைக் கென்று, தேவன் ஒரே ஒரு கருவியையே வைத்திருக்கிறார். அது உண்மை. அதுதான் அவருடைய வார்த்தை. இயேசு யோவான். 5:24-ல், “என் வசனத்தைக் கேட்டு”, கேட்டு என்றால் அது உரைக்கப்படும் போது அதன் சத்தத்தைக் கேட்பது என்று அர்த்தமல்ல. கேட்டு என்றால் ஏற்றுக் கொள்வது என்று பொருள். “என் வசனத்தை யார் ஏற்றுக் கொள்கிறார்களோ” ஆமென். “என் வசனத்தைக் கேட்கிறவன்”, எவனோ “நீங்கள் அமைதியாக நின்று கொண்டிருந்து, அதை மூடத்தனம் என்று அழைக்காதீர்கள். ”இந்த காரியங்கள் ஒன்று மேயில்லை, அதை நான் விசுவாசிக்க மாட்டேன்“ என்று சொல்லாதீர்கள். ”என் வசனத்தைக் கேட்டு அது இயேசுவின்

வார்த்தை. அவரே வார்த்தையாயிருக்கிறார். பார்த்தீர்களா? நீங்கள் என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசித்தால், அவன் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான். அவன் நியாயத்தீர்ப்புக்குள் பிரவேசிப்பதில்லை, அவன் ஏற்கனவே அதை கடந்துவிட்டான்“ ஆமென். நான் சகோ. டௌவிடம், ”இப்பொழுது உங்கள் இருதயத் துடிப்பு எவ்விதம் உள்ளது?“ என்று கேட்டேன்.

அவர், “அதை நான் விசுவாசிக்கிறேன். அதைக் கேட்டேன், அதைப் பெற்றுக் கொண்டேன்” என்றார்.

நான், “அப்படியானால், தலைமை சிறப்பு மருத்துவர், தலைமை இயக்குனர், நித்திய ஜீவனின் தலைமை மருத்துவரின் படி, நீங்கள் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டுவிட்டீர்கள். நீங்கள்

ஒருபோதும் ஆக்கினைத் தீர்ப்பை அடைவதில்லை” என்றேன்.

76. அவர், “நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தைக் குறித்து பிரசங்கித்த போது, உங்களுக்குப் பின்னால் நான் நடந்து வந்தேன். நீங்கள் எனக்கு ஞானஸ்நானம் கொடுத்தீர்கள். நான்... நான் ஒரு காலத்தில் இருந்ததைப் போல இப்பொழுது இல்லை. ஏதோ ஒன்று எனக்குச் சம்பவித்தது. அதைக் குறித்து நான் அக்கறை கொள்ளாமல் வேறு வழியில் நடந்து கொண்டிருந்தேன். ஆனால் நான் திரும்பி இந்த வழியில் நடக்கத் தொடங்கிவிட்டேன். அவரிடம் நெருங்க வேண்டுமென்று என் இருதயம் இரவும் பகலும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் நான் விசுவாசிக்கிறேன்.

அவை ஒவ்வொன்றுக்கும் நான் ”ஆமென்“ என்று சொல்கிறேன். அது எவ்வளவாக என்னை அறுத்தாலும் எனக்குக் கவலை யில்லை. அது அளக்கும் அளவிற்கு நான் சரியாக இருக்க விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த மட்டில், ”நான் அவ்விதமே இருந்து வருகிறேன்“ என்றார்.

நான், “உங்கள் இருதயம் மிகவும் நன்றாக துடித்துக் கொண்டிருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் ஆவிக் குரிய பிரகாரம் நன்றாக இருக்கிறீர்கள்” என்றேன்.

அவர், “சகோ. பிரான்ஹாமே, எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும் போது அதில் நான் செல்லமுடியுமா என்று வியக்கிறேன்” என்றார்.

நான், “யார் செல்வார்கள், யார் செல்ல மாட்டார்கள் என்று என்னால் சொல்ல முடியாது” என்றேன்.

அவர், “எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும் போது நான் உயிரோடிருக்க விரும்புகிறேன். எடுத்துக் கொள்ளப்படுதலைக் காண வேண்டுமென்று நான் மிகவும் ஆவலாயிருக்கிறேன்” என்றார்.

77. நான், “சரி, விஞ்ஞானப் புத்தகம் - ஆத்தும விஞ்ஞானம் - இங்கு என்ன உரைக்கிறதென்று பார்க்கலாம். நல்லது அது 2 தெசலோனிக்கேயர்: 5-ம் அதிகாரத்தில் (1தெசலோனிக்கேயர்: 4-ம் அதிகாரம் - தமிழாக்கியோன்) ”கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை (அதாவது அவர்களை நாம் தடை செய்வதில்லை). ஏனெனில்

தேவ எக்காளம் தொனிக்கும், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்கள் அல்லது இளைப்பாறிக் கொண்டிருக்கிற வர்கள், முதலாவது எழுந்திருந்து அழியாமையைத் தரித்துக் கொள்வார்கள். அப்பொழுது அந்நாளில் உயிரோடிருக்கும் நாமும் அதாவது அவர்கள் உயிரோடு எழுந்திருக்கும் நாளில் இருப்பவர்கள் ஒரு நொடிப் பொழுதில், ஒரு இமைப்பொழு தில் மறுரூபமாகி, அவர்களைச் சந்தித்து, கர்த்தரை ஆகாயத்தில் சந்திக்க, அவர்க ளோடே கூட எடுத்துக் கொள்ளப்படு வோம்“ என்று உரைக்கிறது. எனவே நீங்கள்; நித்திரையடைந்திருந்தாலும் அடையாமற் போனாலும்; நீங்கள் எந்த இடத்திலும் அடக்கம் பண்ணப்பட்டிருந்தா லும், அடக்கமே பண்ணப்படாமல் போனாலும், நீங்கள் எப்படியும் எடுத்துக் கொள்ளப்படுதலில் வருவீர்கள். எதுவும்

உங்களைத் தடுக்க முடியாது. நீங்கள் அங்கிருப்பீர்கள். சகோ.டௌ, என்னுடைய பேரப் பிள்ளைகள், அவர்களுடைய பேரப் பிள்ளைகள், அவர்களுடைய பேரப் பிள்ளைகள், அவர்களுடைய பேரப் பிள்ளைகள் காலம் வரைக்கும் அவர் வராமல் போனாலும், அவர் வரும்போது நீங்கள் அப்பொழுதும் அங்கிருப்பீர்கள். அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுதலில் போவார்கள் என்றால், அவர்கள் மருரூபமாவதற்கு முன்பே நீங்கள் அங்கிருப்பீர்கள்" என்றேன். அது உண்மை. ஆமென்!

78. வரப்போகும் கோபாக்கினை ஒன்றிருப்பது போலவே, வரப்போகும் ஆசிர்வாதம் ஒன்றுண்டு. ஓ, இவையிரண்டில் ஒன்றை நாம் இன்றிரவு எதிர்நோக்கினவர்களாய் இருக்கவேண்டும். அழிவுக்கென கோபாக்கினை உங்கள் மேல் விழுவதை நீங்கள் எதிர்நோக்கி

யிருக்க வேண்டும், அல்லது கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையை நீங்கள் எதிர்நோக்கியிருக்க வேண்டும். ஒன்றை வாக்களித்த அதே தேவன் தான். அதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அந்த மகிழ்ச்சிகரமான

ஆயிர வருட அரசாட்சியின்

நாள் வர நான் விழிப்புடன் காத்திருக் கிறேன்

அப்பொழுது நமது ஆசிர்வதிக்கப் பட்ட

கர்த்தர் வந்து காத்திருக்கும்

தம் மணவாட்டியை எடுத்து செல்வார்

ஓ, இனிமையான அந்த விடுதலையின் நாளுக்காக

என் இருதயம் ஏங்கித் தவிக்கிறது

அப்பொழுது இயேசு மறுபடியும் பூமிக்கு வருவார்.

அப்பொழுது இந்த அந்தகார உலகின்

பாவமும், துயரமும்,

வேதனையும் மரணமும் ஒய்ந்திருக்கும்

இயேசுவுடன் அரசாளப் போகும்

அந்த மகிமையான ஆயிர வருட

சமாதான ஆட்சியில்

(ஓ, என்னே! "இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். பாருங்கள்)

79. தேவன் ஒன்றை உரைத்திருந்தால், அது நிறைவேறியே ஆகும். "அவர்கள் வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்

பார்கள், திராட்சைத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார் கள். அவர்கள் நாட்டுகிறதும், வேறொரு வர் கனி புசிக்கிறதுமாயிருப்பதில்லை. அவர்கள் தங்கள் சொந்த திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள்" ஆமென்! ஆமென்! "என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்கு செய்வதில்லை" அல்லே லூயா! (ஏசா: 65:21, 22, 25).

இந்த அழிவுள்ள சரீரம் அழியாமை யைத் தரித்துக் கொள்ளும் பொழுது, மரணம் ஜெயமாக விழுங்கப்படும். அப்பொழுது அவர் இருக்கிற வண்ண மாகவே நாம் அவரைத் தரிசித்து, அவருடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பான ஒரு சரீரத்தைப் பெற்றிருப்போம். ஓ, என்னே, வரப்போகும் அந்த நேரம்!

80. அதே தேவனும், ஊற்றப்படவிருக்கும் கோபாக்கினையைக் குறித்து தேவனுடைய வார்த்தையை முன்னுரைத்த அதே தீர்க்கதரிசிகளுமே வரவிருக்கும் ஆசிர்வாதங்களைக் குறித்தும் முன்னுரைத்துள்ளனர். அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது! தேவன் ஒரு தேசத்தை எச்சரிக்காமல், அதற்கு அழிவைத் தருவதில்லை. அவர் மனிதனை எச்சரிக்காமல் அவனுக்கு அழிவைத் தருவதில்லை. அவர் அழிவைத் தருவாரெனில், நமக்கு அப்பொழுது ஏதோ ஒன்று நேர்ந்துள்ளது. இக்கடைசி நாட்களின் அடையாளங்களின் உறுதிப்படுதல் நம்மோடு உள்ளது. அந்த மகத்தான பரிசுத்த ஆவியானவர் நமது மத்தியில் அசைவாடி, அவருடைய பிரசன்னத்தினால் சபையை நிரப்பி, அவருடைய வார்த்தையை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார். இந்நாட்களில் ஒன்றில்

சபையானது தேவனுடைய வல்லமை யினால் ஆகாயத்திற்கு ஏறிச் செல்வதற்காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.





**Bro. Branham:**

**மக்களை எச்சரிக்காமல் காரியங்கள் இந்த விதமான நிலையை அடைய விட்டுவிட்ட இந்த பிரசங்கிகளின் கதி என்ன? தேவன் அவர்களிடம் கணக்கு கேட்பார்.**

Message: **கடல் பயணத்தில் சாட்சி**

# கழுகின் சத்தம்

## நவம்பர் 29, 2023





சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து